**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1635/2022 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | லதா | க–பெ | நாகு |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 47/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | பேன்சி வளையல் கடை வியாபாரம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.03.2026**
**எதிரி ஆஜர்.**

---------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து பேன்சி வளையல் கடையில் வேலை செய்து வருகிறேன். அசா1 எனது மகள். ஆஜர் எதிரியை தெரியும். தற்சமயம் வழக்கு குறித்து ஆஜர் எதிரியுடன் சமரசம் செய்து கொண்டு சமாதான மனு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியும். வழக்கிற்கும் ஆஜர் எதிரிக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. சம்பவ சமயத்தில் எதிரி மீது இருந்த பகை உணர்வு காரணமாக அசா1 அவர் மீது புகார் வாக்குமூலம் அளித்துவிட்டார். 20.08.2020 அன்று இரவு 9.00 மணிக்கு உதயம் நகர் சந்திப்பு அருகில் அசா1 நடந்து சென்று கொண்டிருந்தபோது அருகில் இருந்த பள்ளத்தில் தவறுதலாக நான் கீழே விழுந்துவிட்டார். ஆகையால் அவருடைய வலது பக்க கண் புருவத்தில் இரத்த காயங்கள் ஏற்பட்டது. எதிரி அங்கிருந்ததால் அவர் தான் முன் விரோதத்தின் காரணமாக அவரை தாக்கியிருப்பார் என்று நினைத்து தவறுதலாக புகார் அளித்துவிட்டார்.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் கடந்த 20.08.2020 அன்று இரவு 9.00 மணியளவில் தன்னுடைய குடும்பத்தாருடன் உதயம் நகர் சந்திப்பு அருகில் நடந்து சென்று கொண்டிருந்தபோது ஆஜர் எதிரியானவர் அங்கு வந்து முன் விரோதத்தை மனதில் வைத்து அந்த இடத்தில் கீழே கிடந்த கல்லை எடுத்து அசா1 ன் நெற்றியில் வலது பக்க கண் புருவத்தில் அடித்து இரத்த காயத்தை ஏற்படுத்தியதாகவும் அப்போது நாங்கள் அசா1 ஐ பிடித்து கொண்ட போது எதிரியானவர் அங்கிருந்து செல்லும் போது கொலை செய்துவிடுவதாக மிரட்டியதாகவும் சிகிச்சைக்காக நாங்கள் அசா1 ஐ முதலில்

காரைக்குடி அரசு மருத்துவமனையிலும் மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனையிலும் சிகிச்சைக்காக சேர்த்ததாகவும் சொல்லிவிட்டு தற்போது வழக்கு விசாரணையில் எதிரி தனக்கு தெரிந்தவர் என்பதால் அவருடன் சமரசம் செய்து கொண்டு உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.26 16:23:08 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1635/2022 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | தாரணி | க–பெ | சூர்யா |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 23/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.03.2026**
**எதிரி ஆஜர்.**
-----------------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். தற்சமயம் வழக்கு குறித்து ஆஜர் எதிரியுடன் சமரசம் செய்து கொண்டு சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன். **சமாதான மனுவில் உள்ள கையொப்பம் அசாஆ 1. புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அசாஆ 2.** வழக்கிற்கும் ஆஜர் எதிரிக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. சம்பவ சமயத்தில் எதிரி மீது இருந்த பகை உணர்வு காரணமாக அவர் மீது புகார் வாக்குமூலம் அளித்துவிட்டேன். 20.08.2020 அன்று இரவு 9.00 மணிக்கு உதயம் நகர் சந்திப்பு அருகில் நடந்து சென்று கொண்டிருந்தபோது அருகில் இருந்த பள்ளத்தில் தவறுதலாக நான் கீழே விழுந்துவிட்டேன். ஆகையால் என்னுடைய வலது பக்க கண் புருவத்தில் இரத்த காயங்கள் ஏற்பட்டது. எதிரி அங்கிருந்ததால் அவர் தான் முன் விரோதத்தின் காரணமாக என்னை தாக்கியிருப்பார் என்று நினைத்து தவறுதலாக புகார் அளித்துவிட்டேன்.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையில் கடந்த 20.08.2020 அன்று இரவு 9.00 மணியளவில் தன்னுடைய குடும்பத்தாருடன் உதயம் நகர் சந்திப்பு அருகில் நடந்து சென்று கொண்டிருந்தபோது ஆஜர் எதிரியானவர் அங்கு வந்து முன் விரோதத்தை மனதில் வைத்து அந்த இடத்தில் கீழே கிடந்த கல்லை எடுத்து தன்னுடைய நெற்றியில் வலது பக்க கண் புருவத்தில் அடித்து இரத்த காயத்தை ஏற்படுத்தியதாகவும் தன்னுடைய பெற்றோர்கள் தன்னை பிடித்து கொண்ட போது எதிரியானவர் அங்கிருந்து செல்லும்

போது கொலை செய்துவிடுவதாக மிரட்டியதாகவும் சிகிச்சைக்காக தன்னுடைய பெற்றோர்கள் முதலில் காரைக்குடி அரசு மருத்துவமனையிலும் மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனையிலும் சென்று சிகிச்சையில் இருந்ததாகவும் சொல்லிவிட்டு தற்போது வழக்கு விசாரணையில் எதிரி தனக்கு தெரிந்தவர் என்பதால் அவருடன் சமரசம் செய்து கொண்டு உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.26 16:23:14 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.